# 2.1 துவாக்குடி நகராட்சி

## 2014 – 2015–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1) அமைப்பும் மேலாண்மை :

இந்நகராட்சி அரசாணை எண்: 277 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள்: 5.7.04 –ன்படி தேர்வுநிலை பேரூராட்சியிலிருந்து வகை மாற்றம் செய்யப்பட்டு 10.7.2004– ம் தேதியிலிருந்து 3–ம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண். 154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 9.8.2010க்கிணங்க, 9.8.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக நாளது தேதி வரை செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சி துவாக்குடி, துவாக்குடிமலை ஆகிய இரு பகுதிகளை உள்ளடங்கியது.

துவாக்குடி நகராட்சி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதியில் அடங்கியுள்ளது.

துவாக்குடி நகராட்சி பகுதி உத்திரவு எண்: 135 –ன்படி பிரிக்கப் பட்டுள்ளது. 2011 –ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை: 38875.

| | | | |
|---|---|---|---|
| அ) | நகரப்பரப்பளவு | : | 14,371 ச. கி. மீ. |
| ஆ) | மக்கள் தொகை | : | 38,875. |
| இ) | நகர்மன்ற உறுப்பினர் எண்ணிக்கை | : | 21 |
| ஈ) | நகராட்சியின் நிலை | : | இரண்டாம் நிலை |
| உ) | நகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ள வருவாய் கிராமங்கள் | : | 84 – துவாக்குடி. |

**<u>நகர்மன்றம்</u>**

அரசு ஆணை எண்: 135, 136 –ன் படி நகராட்சி பகுதி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 17.10.2011 –ல் நகராட்சி மன்றத்தேர்தல் நடத்தப்பட்டது. 21 வார்டுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தபட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் 4,11 மற்றும் 12 ஆகும். இதில் தாழ்த்தப்பட்ட பிரிவு பெண்களுக்கு 12– வது வார்டும், மற்றும் பெண்களுக்கு ஆறு வார்டுகள் உள்ளன, ஆக பெண்களுக்கென 7 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## நகர்மன்றக் கூட்டங்கள்

சாதாரணமாக மாதந்தோறும் மாதாந்திரக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது அவசர நிமித்தமாக இரண்டு அவசரக்கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. அறிக்கை ஆண்டில் கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை பின் வருமாறு.

### 1.4.2014 முதல் 31.3.2015 முடிய கூட்டப்பட்ட கூட்டங்களின் விபரம்

| வ.எண் | விபரம் | கூட்டம் | பொருள்கள் |
|---|---|---|---|
| 1. | சாதாரணக்கூட்டம் | 3 | 112 |
| 2. | அவசரக்கூட்டம் | 3 | 73 |
| 3. | சிறப்புக்கூட்டம் | 0 | 0 |
| 4. | நியமனக்குழு கூட்டம் | 0 | 0 |
| 5. | ஒப்பந்தக்குழு கூட்டம் | 0 | 0 |
| | மொத்தம் | 06 | 185 |

## 2) வேலையில் ஈடுபட்டுள்ளவர்கள் :

ஆணையர் : திருமதி. கே.எம். சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., இந்நகராட்சியில் 06.05.2013 முதல் பணிபுரிந்து வருகிறார். மேலும் கீழ்கண்ட விவரப்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| | |
|---|---|
| நகராட்சி பொறியாளர் | – 1 |
| பொதுப்பணி மேற்பார்வையாளர் | – 2 |
| உதவியாளர் | – 1 |
| இளநிலை உதவியாளர் | – 3 |
| சுகாதார ஆய்வர் | – 1 |
| நகரமைப்பு ஆய்வர் | – 1 |
| வருவாய் உதவியாளர் | – 1 |
| பணி ஆய்வர் | – 1 |
| பதிவறை எழுத்தர் | – 1 |
| அலுவலக உதவியாளர் | – 1 |
| ஓட்டுநர் | – 1 |
| பொது சுகாதார பணியாளர்கள் | – 22 |

## 3) வழக்குகள் மற்றும் சட்ட செலவுகள் :

| | |
|---|---|
| ஆண்டு இறுதியில் முடிவு பெறாத வழக்குகள் | : 6 |
| அறிக்கை ஆண்டில் வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்ட தொகை | : 22500/– |
| சென்ற ஆண்டு செலவிடப்பட்ட தொகை | : 12000/– |

## 4) பொறியாளர் பிரிவு :

இந்நகராட்சியில் நகராட்சி பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு 20.05.2013 முதல் மு. குணசேகரன் நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். பணி மேற்பார்வையாளர் திரு. ஆர். பாலமுருகன் என்பவர் 03.07.2012 முதல் பணிபுரிந்து வருகிறார். பணி ஆய்வர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு திருமதி. ரா. ரஞ்சனி 19.11.2013 முதல் பணிபுரிந்து வருகிறார்.

## 5) போக்குவரத்துக்கள் :

**சாலைகள் மற்றும் பாலங்கள்**

அ) இந்நகராட்சி வழியாகச் செல்லும் தேசியநெடுஞ்சாலை : நான்கு வழிச்சாலைகள் நாகப்பட்டிணம் முதல் மைசூர் வரை அமைந்துள்ளது.

ஆ) இந்நகராட்சி வழியாகச் செல்லும் மாநில நெடுஞ்சாலை : துவாக்குடிமலை அண்ணா வளைவு முதல் அய்யம்பட்டி வரை

(இ) துவாக்குடி முதல் கீரனூர் வரையிலும் அமைந்துள்ளன அனைத்து தார்சாலைகளும் தற்போது திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் விபரம்</u>**

| | | | |
|---|---|---|---|
| அ) | சிமெண்ட் சாலைகள் | : | 12.09 கி. மீ. |
| ஆ) | தார் சாலைகள் | : | 23.49 கி. மீ. |
| இ) | ஜல்லி சாலைகள் | : | 5.92 கி. மீ. |
| ஈ) | மண் சாலைகள் | : | 15.12 கி. மீ. |
| | மொத்தம் | : | 56.62 கி. மீ. |

## 6) (அ) உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் :

நகராட்சியினால் பள்ளிகள் ஏதும் பராமரிக்கபபடவில்லை, இந்நகரில் கீழ்கண்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

1) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, துவாக்குடிமலை

2) ) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, துவாக்குடி

3) ஆர்.இ.சி நடுநிலைப்பள்ளி, துவாக்குடி

4) அரசினர் மேல்நிலைப்பள்ளி, துவாக்குடி

5) அரசு கலைக்கல்லூரி, துவாக்குடிமலை

6) அரசு தொழில் நுட்ப கல்லூரி.

7) தேசிய தொழிற்நுட்ப பயிலகம்.

8) உணவு கலைக் கல்லூரி.

### (ஆ) தனியார் பள்ளிகள்

1) குழந்தை ஏசு மேல்நிலைப்பள்ளி (மகளிர்) துவாக்குடிமலை
2) சாரதா துவக்கப்பள்ளி, காமராஜபுரம்
3) விவேகானந்தா துவக்கப்பள்ளி, காமராஜபுரம்
4) செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேசன் பள்ளி, துவாக்குடிமலை.

## 7. தண்ணீர் வசதி

அறிக்கை ஆண்டில் உள்ளூர் திருவிழாக்கள் வழக்கம் போல் நடைப்பெற்று வருகிறது, இந்நகராட்சியில் வாரச்சந்தை ஏதும் நடைப்பெறவில்லை, இந்நகராட்சியில் கொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்ட செயல்பாட்டில் மூன்று குடிநீர் விநியோகத் தொட்டிகள் மூலம் குடிநீர் தினந்தோறும் 1 மணி நேரம் வீதம் 23.50 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவற்றுடன் கைப்பம்பு 25–ம் மின்விசையுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் 55–ம் செயல்பட்டு வருகிறது இவ்விரண்டு குடிநீர் ஆதாரங்கள் மூலமாக நபர் ஒருவருக்கு நாள் தோறும் 83 LPCD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொது குழாய்கள் | – | 75 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | – | 3365 |

## 8. கழிவு நீர் வடிகால்கள்

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதுமில்லை. பக்கா, கச்சா சாக்கடைகள் நகராட்சியின் பராமரிப்பில் உள்ளன.

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் நகராட்சியினால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நில அளவை செய்யப்பட்டு வருகிறது. பாலங்கள், ஆற்றோடை பாதைகள், மதகுகள் ஆகியவை இல்லை ஏனெனில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைப் பகுதிகளில் ஆறுகள் ஏதும் குறுக்கிடவில்லை. நகராட்சி எல்லைப்பகுதியில் ஆறுகள் ஏதும் செல்லவில்லை.

## 9. தெருவிளக்கு வசதி

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வரும் விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சோடியம் ஆவி விளக்கு | – | 285 | எண்ணிக்கை |
| 2. | குழல் விளக்கு | – | 1117 | எண்ணிக்கை |
| 3. | இதர விளக்குகள் | – | 3 | எண்ணிக்கை |
| | **மொத்தம்** | | **1405** | |

அறிக்கை ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவு ரூ. 726979/–ம் , மற்றும் தெருவிளக்கு மின் கட்டணமாக ரூ. 1792996/–ம் செலவிடப் பட்டுள்ளது.

## 10. பொது நலம் மருத்துவ உதவி

இந்நகராட்சி எல்லைக்குள் 5 தனியார் மருத்துவமனையும் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகமும் அரசு மருத்துவமனையும் ( பாரத மிகு மின் நிறுவன மருத்துவமனை ) உள்ளன. தேசிய தொழில்நுட்ப கழக வளாகத்தில் அரசு மருத்துவமனைகளும் உள்ளன.

## தனியார் மருத்துவமனைகள் விபரம்

1. மில்லர் மருத்துவமனை, துவாக்குடி.
2. சி.எஸ்.ஐ மிஷன் மருத்துவமனை, ராவுத்தாண்மேடு, துவாக்குடி.
3. சி.எஸ்.ஐ மிஷன் மருத்துவமனை, துவாக்குடிமலை.
4. நஷீர் மருத்துவமனை, அக்பர்சாலை, துவாக்குடிமலை.
5. ஜனனி கிளினிக், துவாக்குடி.

## அரசு மருத்துவமனைகள் விபரம்

இந்நகராட்சி பகுதியில் 1.7.2014 முதல் அரசு மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இது தற்போது விரிவுப்படுத்தப்பட்டு 32 படுக்கைகள் கூடுதலாக நிறுவி செயல்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

# 11. பொது சுகாதாரம்

இந்நகராட்சியில் சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் திரு. கோ. பால சுப்ரமணியன் என்பவர் 1.3.2013 முதல் பணிபுரிந்து வருகிறார், பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்கள் 22 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அறிக்கை ஆண்டில் பொது சுகாதாரத்தை பற்றிய பிரசுரங்கள் துப்புரவு பணியாளர்களை கொண்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

# 12. பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்

### அறிக்கை ஆண்டில் பிறப்பு இறப்புகளை பதிவு செய்யும் பணி

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 272 ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் மகப்பேறு இல்லங்கள் பராமரிக்கப்படவில்லை. குழந்தைகள் காப்பகம் ஊராட்சி ஒன்றியம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 13. இறப்பு விகிதம் தொற்று நோய்கள்

1. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் : 71
2. காலரா அம்மை போன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை. மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன.

### சென்ற ஆண்டில் அறிக்கை

| | | |
|---|---|---|
| 1. காலரா | – | இல்லை |
| 2. அம்மை | – | இல்லை |
| 3. பிளேக் | – | இல்லை |
| 4. மலேரியா | – | இல்லை |
| 5. சீதபேதி | – | இல்லை |
| 6. காய்ச்சல் | – | இல்லை |
| 7. பிற மூச்சுவை நோய்கள் | – | இல்லை |
| 8. பிற காரணங்களால் | – | 71 |
| 9. வெறிநாய் கடியினால் | – | இல்லை |

### இந்நகராட்சியில் கொசுதடுப்பு ஒழிப்புத்திட்டம்.

இந்நகராட்சியில் பொது சுகாதார துப்புரவு பணியில் உள்ள ஒரு பணியாளர்களைக் கொண்டு வாரம் ஒரு முறை வீதம் சுழற்சி முறையில் 1 முதல் 15 வார்டுகளுக்கும் கைத் தெளிப்பான் இயந்திரம் மூலம் கொசு மருந்து தெளித்து பொது சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது. 16 முதல் 21 வார்டுகள் பாரதமிகுமின் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 14. கொக்கிப்புளு பிளேக்

அறிக்கை ஆண்டில் இந்நோய் நகராட்சியில் இல்லை.

## 15. நோய் தடுப்புத்திட்டம்

குழந்தைகளுக்கு சொட்டு மருந்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் பள்ளிகளுக்கான வாழ்வொளித்திட்டம் மூலம் மாணவ மாணவியர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## 16. குடும்ப நலத்திட்டம்

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை. விரிவு படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் குடும்ப நலத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

## 17. சிறுசேமிப்பு

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவரால் இந்நகராட்சிக்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்படவில்லை.

## 18. பொது சுகாதாரம் துப்புரவு பாதுகாப்பு

அறிக்கை ஆண்டில் 12 பொது கழிவறைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை மாலை இருவேளை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு குப்பைகள் நகராட்சியிலுள்ள டிப்பர் லாரி மற்றும் டம்பர் பிளேசர் வாகனம் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

## 19. வீட்டு மல அறைகள்

அ) நகரில் மொத்த குடியிருப்புகள் 8425 இதில் மல அறைகள் உள்ள குடியிருப்பு 5195 ஆகும்.

ஆ) மல அறைகள் இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் நகராட்சியினால் பராமரிக்கப்படும் பொது கழிப்பிடங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இ) துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வன செய்து வருகிறார்கள்.

ஈ) நகராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் யாணைக்கால் நோய் ஒழிப்புத்திட்டம் செயல்பட்டு வருகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க அவ்வப்போது கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

## 20. கலவை உரம்

இந்நகராட்சியில் கலவை உரம் தயாரிக்க நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாததால் கலவை உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தபடவில்லை. இந்நகராட்சி பகுதியில் பாரத மிகு மின் நிறுவன தொழிற்சாலை மற்றம் அதன் குடியிருப்புகள் அமைந்துள்ளது, தேசிய தொழில்நுட்ப கழகம், அரசு கலைக்கல்லூரி, அரசு உணவுக்கலை கல்லூரி, பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், அரசு பாலிடெக்னிக் போன்ற கல்வி நிறுவனங்கள் இயங்கி வருகின்றது, மேலும் இந்நகராட்சி பகுதியில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தில் 200 தொழிற்சாலைகள் இவை அனைத்தும் திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலை பகுதியில் இயங்கி வருவதால் தனியார் நிலங்கள் மிக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதால் அரசு நிர்ணயிக்கும் விலைக்கு நிலம் கொள்முதல் செய்ய வாய்ப்பில்லாமல் உள்ளது. தற்போது நகராட்சிக்கு சொந்தமாக 4.00 ஏக்கர் புறம்போக்கு நிலம் ஒதுக்கீடு செய்வதற்கு மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நகராட்சிக்கு கலவை உரம் தயாரிக்க சொந்தமாக இடம் வாங்கிய பிறகு கலவை உரம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 21. அச்ச அருவருக்க மற்றும் அபாயகராமான தொழில் உரிமம் (D&O Trade Licence)

1920 ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 249 பிரிவு படி துவாக்குடி நகராட்சியில் அச்ச அருவருக்க மற்றும் அபாயகரமான தொழில் உரிம கட்டணம் 2013–14 ம் ஆண்டுக்கு ரூ. 1,22,978/– வணிக தலங்களுக்கும், 2014–15 ம் ஆண்டுக்கு ரூ. 1,33,353/– வணிக தலங்களுக்கும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

2013–14 சென்றாண்டு உரிம கட்டணத்தொகை – ரூ. 1,22,978/–

2014–15 ஆண்டிற்கு உரிம கட்டணத்தொகை – ரூ. 1,33,353/–

## 22. தீயணைப்பு நிலையம்

இந்நகராட்சி பகுதியில் உள்ள பாரதமிகு மின் நிறுவன வளாகத்தில் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

## 23. போக்குவரத்து

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் பேரூந்துகள் இயக்கப்படுகின்றன. வாடகை கார்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

## 24. சந்தைகள், வண்டி நிலையங்கள், பேரூந்து நிலையங்கள்

துவாக்குடி நகராட்சியிக்கு சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் சந்தைகள், வண்டி நிலையங்கள் மற்றும் பேரூந்து நிலையங்கள் பராமரிக்கப்படவில்லை. விவசாயத்துறை மூலம் உழவர் சந்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 25. சந்தைகள்

அறிக்கையாண்டில் சந்தைகள் ஏதும் நடை பெறவில்லை. இந்நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் இல்லை என்பதால் சந்தைகள் அமைக்கப்படவில்லை.

## 26. பேரூந்து நிலையம்

நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் பேரூந்து நிலையம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. தேசிய நெடுஞ்சாலைத்துறையினருக்கு சொந்தமான இடத்தில் நகர பேரூந்துகள் வந்து செல்கின்றன, மேற்படி இடம் தேசிய நெடுஞ்சாலை துறை மூலம் நான்கு வழி சாலை அமைக்கப்பட்டுள்ளது, பேரூந்து நிலையம் அமைக்க நெடுஞ்சாலைத்துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 27. மிதிவண்டி மற்றும் மொபட்

நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் மிதி வண்டி மற்றும் மொபட் நிறுத்தும் ஸ்டாண்டு நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

## 28. வாடகை உந்து நிலையம் (சைக்கிள் ரிக்ஷா மற்றும் வண்டி ஸ்டாண்டுகள்)

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

## 29. சாலையோர மரங்கள்

சாலையோர மரங்கள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2சி மரவரி வருவாய்துறையின் மூலம் வசூல் செய்யப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 30. நகரமைப்பு பிரிவு

இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் அரசாணை எண். 30 நாள். 13.02.2013– ல் தோற்றுவிக்கப்பட்டு மேற்கண்ட நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தில் திரு. இரா. அன்பழகன் என்பவர் 10.01.2014 முதல் பணிபுரிந்து வருகிறார்.

## 31. விரிவு மேம்பாட்டுத்திட்டம்

இத்தலைப்பின் கீழ் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

## 32. வரை கடப்புகள்

இந்நகராட்சி பகுதி நில அளவை செய்யப்படவில்லை. நில அளவை மேற் கொள்ள சர்வே துறையினருக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது, விரைவில் நில அளவை செய்யப்படவுள்ளது.

## 33. தொழிற்பகுதியாக அறிவித்தல்

இந்நகராட்சி பகுதியில் பாரதமிகு மின் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் மூலம் சுமார் 20000 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், இந்நிறுவனத்தின் மூலம் சொத்து வரி மற்றும் மூன்றில் ஒரு பங்கு தொழில்வரி நகராட்சிக்கு வருவாயாக பெறப்பட்டு வருகிறது, இது தவிர சிட்கோ தொழில்பேட்டை இயங்கி வருகிறது தோராயமாக 215 கம்பெனிகள் இயங்கி வருகின்றன. மொத்த மக்கள் தொகையில் 50% பேர் விவசாயிகள் ஆவர்.

மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

1. சொத்துவரி – 140 %
2. தொழில்வரி – 15 %

அறிக்கையாண்டில் 958 எண்ணம் புதியதாக வரி விதிக்கப் பட்டு நடப்பு ஆண்டிலேயே வசூல் செய்யப்பட்டுள்ளது, இதில் வரி திருத்தம் செய்யப்பட்ட சொத்துவரியும் அடங்கும்.

## சொத்து வரி கேட்பு வசூல் நிலுவை விபரம்

| விபரம் | நடப்பு | நிலுவை | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 66.23 | 49.29 | 115.52 |
| வசூல் | 62.19 | 37.80 | 100.00 |
| நிலுவை | 11.49 | 4.03 | 15.52 |
| வழக்கில் உள்ளவை | | 94.22 | 94.22 |

## 34. பொது வருவாய்

அ. சொத்து வரி 81 (1) – ன்படி சொத்து வரியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை சேர்ந்துள்ளன.

வருட வாடகை மதிப்பில் அரைவருட விகிதம்

( 1998 – 99 இரண்டாம் அரையாண்டு முதல் )

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது காரியங்களுக்கு | – | 4% |
| 2. | தண்ணீர் வரி | – | 2% |
| 3. | விளக்கு வரி | – | 2% |
| 4. | சாக்கடை வரி | – | 1% |
| 5. | துப்புரவு வசதி வரி | – | 1% |

6. காலி நில வரி – சொத்து மதிப்பில் 0.05% நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

## 34. 1. சொத்துவரி சீராய்வு –

அரசாணை (நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 12.11.2007 மற்றும் அரசாணை எண். 110 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 23.6.08 ன் படி இந்நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 25 சதவீதம் உயர்வு செய்தும் தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 100 சதவீதமும் வணிக கட்டிடங்களுக்கு 150 சதவீதமும் உயர்வு செய்து சொத்துவரி வசூல் செய்யப்படுகிறது.

## 34. 2. தொழில்வரி –

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் திருத்தப்பட்ட படி 59/1998 பிரிவு (124) உட்பிரிவு (13) ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு துவாக்குடி நகர்மன்றம் தனது 29.8.08 ம் தேதிய 305 வது தீர்மானத்தில் துவாக்குடி நகராட்சி எல்லைக்குள் நுண்ணறிவு தொழில்கள், வணிக தொழில்கள், மரபு தொழில்கள் மற்றும் பணித் தொழில்கள் புரிவோருக்கும், வெளியில் தொழில் புரிந்து இந்நகராட்சி எல்லைக்குள் குடியிருந்து வருவோருக்கும் தொழில் வரி விதித்து வசூலிக்கப்பட்டு வரும் தொழில் வரியினை 1.10.2008 இரண்டாம் அரையாண்டு முதல் ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வந்தது மேலும் 2013–14 ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி சீராய்வு செய்து ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 25 சதவீதம் உயர்த்தி இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 421 நாள். 12.09.2013 ன் படி கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து நாளது தேதி வரை வசூலிக்கப்பட்டு வருகிறது.

## தொழில்வரி விதிப்பு விபரங்கள்

| வ.எண் | வருட வருமானம் (ரூபாயில்) | தற்போதைய அரையாண்டு தொழில்வரி ( ரூபாயில்) | 25% உயாத்தப்பட்ட தொழில்வரி ( ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | 21000 முதல் 30000 வரை | 95/– | 120/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | 250/– | 375/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | 470/– | 590– |
| 5 | 60001 முதல் 75000 வரை | 720/– | 900/– |
| 6 | 75001 க்கு மேல் | 940/– | 1175/– |

## தொழில் வரி கேட்பு வசூல் நிலுவை விபரம்

| விபரம் | நடப்பு | நிலுவை | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 111.17 | 7.12 | 118.83 |
| வசூல் | 109.80 | 3.76 | 3.35 |
| நிலுவை | 1.90 | 3.35 | 5.25 |

## குடிநீர் கட்டணம்  கேட்பு வசூல் நிலுவை விபரம்

| விபரம் | நடப்பு | நிலுவை | மொத்தம் |
|---|---|---|---|
| கேட்பு | 20.02 | 5.47 | 25.50 |
| வசூல் | 19.42 | 2.98 | 2.48 |
| நிலுவை | 0.60 | 2.48 | 3.08 |

## 35. பொருளாதார நிலை ரொக்கமாக முதலீடு வழியாக

| | | | 2014–15 |
|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | – | ரூ. | 44834581.61 |
| எல்லா இனங்களும் சேர்த்து வரவு | – | ரூ. | 189811823.83 |
| மொத்தம் | | ரூ. | 234646405.44 |
| செலவு | – | ரூ. | 217315744.40 |
| முடிவான இருப்பு | – | ரூ. | 17330661.04 |

## 36. கடன்கள்

குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கு ஆயுள் காப்பீட்டு கழகத்தின் மூலம் ரூபாய். 53.91 லட்சம் கடன் பெறப்பட்டு நாளது வரை ரூபாய். 59.09 பாக்கி உள்ளது. நடப்பாண்டில் கடன் தொகை திருப்பி செலுத்தப்படவில்லை.

## 37. தணிக்கை

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டு தொடக்கத்தில் இருந்து தணிக்கைத்தடைகள் | – | 439 |
| அறிக்கையாண்டில் வரப்பெற்றது மொத்தம் | – | 128 |
| அறிக்கையாண்டில் முடிவு பெற்றவை | – | 155 |
| அறிக்கையாண்டில் இறுதி நிலுவை | – | 412 |

தணிக்கைத்தடை நிலுவையில் உள்ளதை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 38. முடிவுரை

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, பொது சுகாதார வசதி மற்றும் மின் விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வில்லாமல் வழங்க நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு, பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் பெறப்படும் கருத்துரைகளை ஏற்று அதற்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்த இந்நகர் மன்ற தலைவர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல் இந்நகராட்சியின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்ட பணிகளை முழுமையாகவும், துரிதமாகவும் செயல்படுத்த முழு ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த அனைத்து உள்/வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையினை முடிக்கின்றேன்.

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.

| | |
|---|---|
| **அனுப்புநர் :** | **பெறுநர் :** |
| திருமதி. கே.எம். சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்.,<br>ஆணையர்,<br>துவாக்குடி நகராட்சி. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள்,<br>நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,<br>தஞ்சாவூர். |

---

<u>ந.க.எண். சி1/ 677 / 2014 நாள்: 29.05.2015</u>

**அய்யா,**

**பொருள்** : நிர்வாக அறிக்கை – துவாக்குடி நகராட்சியின் 2014 – 2015 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்புதல் – சார்பாக.

**பார்வை** : இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 940 நாள். 26.05.2015.

@@@@@@@

துவாக்குடி நகராட்சியின் **2014 – 2015** ம் ஆண்டின் நிர்வாக அறிக்கையினை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையர்,**
**துவாக்குடி நகராட்சி.**

**இணைப்பு – நிர்வாக அறிக்கை**

**நகல் : -**
நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு
பணிந்து அனுப்பப்படுகிறது.

<u>**துவாக்குடி நகராட்சி**</u>

**மன்ற பொருள்**

துவாக்குடி நகராட்சி **2014–15 –**ம் ஆண்டு நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –** மன்றம் பார்வையிட்டு பதியலாம்.

**ந.க.எண். சி1 / 677 / 2015**

<u>**தீர்மாண எண்.**</u> **940** <u>**நாள். 26.05.2015.**</u>

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) இ. காயாம்பு,**
**தலைவர்,**
**துவாக்குடி நகராட்சி.**

**//உண்மை நகல்//**

**ஆணையர்,**
**துவாக்குடி நகராட்சி.**

# துவாக்குடி நகராட்சி



## நிர்வாக அறிக்கை

## 2014–15

**அனுப்புநர் :**

திருமதி. கே.எம். சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்.,
ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.

**பெறுநர் :**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
தஞ்சாவூர்.

---

ந.க.எண். சி1/ 677 / 2014  நாள்: 31.08.2015

**அய்யா,**

**பொருள்** : நிர்வாக அறிக்கை – துவாக்குடி நகராட்சியின் 2014 – 2015 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்புதல் – சார்பாக.

**பார்வை** : இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 940 நாள். 26.05.2015.

@@@@@@@

துவாக்குடி நகராட்சியின் **2014 – 2015** ம் ஆண்டின் நிர்வாக அறிக்கையினை **29.05.2015** – ம் தேதியன்று இவ்வலுவலக உதவியாளர் நேரில் சமர்பித்துள்ளார், இருப்பினும் அதன் நகலினை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையர்,**
**துவாக்குடி நகராட்சி.**

**இணைப்பு – நிர்வாக அறிக்கை**